




ஓலை 113| ஓசை 236| மார்ச் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை




அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

அகர முதல இலக்கியப் பேரவை
தமிழ் வெல்க வெல்கவென்றே தினம் பாடு!

# திருக்குறள்

## குறள்

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்

## பொருள்

ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக் குறித்துப் பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னால் அதைக் குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## சீரைத் தேடின் ஏரைத் தேடு!

## இன்னிசை சிந்தியல் வெண்பா

முகில்பழுத்தே மாரி முனைந்துநீரை மண்ணில்
அகிலாய் மணந்தோட ஆற்றுக்கே ஈயும்,
மகிழ்ந்ததனால் ஏரளிக்கும் மாண்பு

வெண்முகில் தேரேரி வெண்கதிரோன் வேட்டையாட
மண்முழுதும் பல்லுயிர்கள் வாழுமே, ஏர்சிறக்கும்;
உண்ணுமுண வீயுமேரால் ஓங்கு.

தேரேறி ஊரெல்லாம் சீருடனே வேந்தர்கள்
பேரேறிச் சீர்புகழைப் பெற்றிடவே என்றென்றும்
ஏரேரும் மண்ணுழவர் ஏற்று.


கற்றறிந்தும், செல்வம் கணக்கின்றி வைத்திருந்தும்,
பற்றுடனே ஏருழவர் பாடுபடா விட்டாலோ
அற்றிடுமே வைய(ம்) அறி.

இறைவனுக்கோ தேரேற்றி இன்பவிழா ஏது?
முறையாய் வழிபாடு முன்னேற்றம் ஏது?
நிறைந்தசீர்மை ஏராலே நீடு.

செல்வந்தர் ஆசிரியர் சீர்மை தொழிலதிபர்
பொல்லாத் தொழில்புரிய பொங்கும் வழியேது?
நல்தொழிலே ஏர்த்தொழில் நாடு,

மண்பழுத்தால் நெல்பழுத்து மாண்போ பழுப்பதற்கு
மண்ணுழவர் வாழ்வும் மலையாய்ப் பழுத்தால்தான்
மண்ணெங்கும் சீர்பழுக்கும் மாந்து.

சீர்வந்து தேரேரிச் சிந்தைக் குளிர்ந்திடவே
ஏர்வந்து எங்கெங்கு(ம்) ஏற்றம் பெறவேண்டும்:
ஏர்தேடு சீர்தானா(ய்) ஏற்பு.







**இலக்கணக் குறிப்பு:**

ஒவ்வொரு வெண்பாவும் மூன்றடி பெற்று வரும். இரண்டடிகள் நான்கு சீர்கள் வந்து மூன்றாம் அடியில் மூன்று சீர் வந்து மூன்றாம் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும். இது இன்னிசை சிந்தியல் என்பதால் தனிச் சொல் வராது. மூன்றடியும் ஒரெதுகையாகவோ வேறு எதுகை பெற்றோ வரும். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். சீருக்குச் சீர் வெண்டளை பிறழாமல் வரும், குற்றியலுகரம் பார்க்க வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்

# கருணையைக் கொல்லாதே

## பஃறொடை வெண்பா

அருளொடு வாழ
அகிலம் சிறக்கும்
அருளில்லார் நாளும்
மருளுடன் வாழ்வரே.

அன்பை விதைத்தால்
அருளே மலருமே.
அன்பைப் பொழிந்தால்
அமைதி நிலைக்கும்.

அறவழி நாடிட
ஆக்கத்தைத் தேட
அறமே துணையாகி
அச்சம் விலக்கும்.

கருணை மிகுந்தால்
களிப்பே பெருகும்.
கருத்தாய் வாழ்ந்தே களி.



கவிஞர் செ. கலைவாணி

# மனத்தை அடக்கு

பா வகை-கலித்துறை

கூவிளம் + தேமா +கூவிளம் +தேமா+புளிமாங்காய்

போதுமே என்ற பொன்மனம் வாழும் பொதுவாக
ஏதுமே வேண்டா என்றொரு எண்ணம் எழிலாக
தீதுமே வெல்ல திண்மனம் பெற்றே தெளிவாக
மூதுரை கேட்டே முன்வழி செல்வாய் முனைப்பாக

எண்ணமும் என்றும் ஏற்றமே தந்தே எழிலாக்கும்
திண்ணமும் கொண்டே தீதுனைச் சேரா திடமாக்கும்
வண்ணமும் கொண்டே வாழ்வினில் வென்றே வளமாக்கும்
மண்ணில் என்றும் மன்பதை நன்றே மகிழ்வாகும்



கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்


# வல்லமை + இளையராஜா = இசை

1. இளையராஜாவின் 'வல்லமை'
   லண்டனில் ஒலிக்கிறது
   இந்தியாவின் பெருமை

2. பண்ணையபுரத்தில் உதித்த
   பாமரப் புல்லாங்குழல்
   லண்டனில் ஒத்திசைக்கிறது
   ராயல் பில் ஹார்மானிக்

3. வல்லமை தாராயோ
   பாரதியின் ஏக்கம்
   'வல்லமை' இசை(ந்)த்து
   அளித்தார் இளைய ராஜா.

(VALIANT = வல்லமை)




கவிஞர் ரவிஜி

# சீவக சிந்தாமணி (பதினெட்டு)

## 4. குணமாலையார் இலம்பகம்.



பட்டத்து யானை அசனிவேகம் கோபம்
திட்டமாக உணவு கொள்ள மறுத்தது
கட்டுக்கடங்காமல் பாகனை எதிர்த்தது
கிட்டிக்கயிறு அறுத்து பிளிறல் தொடர்ந்தது
(கிட்டிக்கயிறு : பூட்டுக்கயிறு)
அறிந்த மன்னன் காரணம் கேட்டான்
''சிறந்த அசனிவேகம் நிலை என்ன?''
''தெறித்த களிற்றை அடக்கினான் சீவகன் ''
சீற்றம் கொண்ட அரசன் ஆணை

'' செட்டி மகனை விரைவில் கொள்க,''
கட்டிக் கொண்டு வாருங்கள் உடனே
சிட்டாய் பறந்தான் சேனையுடன் மதன்
பட்'டென சீவகனை சூழ்ந்தனர் வீரர்கள்.

தன் சூழல் உணர்ந்தான் சீவகன்
''வன்பகை களையும் நேரமல்ல''
தன் தந்தை கூறியது நினைவில்
சொன்னபடி வஞ்சம் தீர்க்க மறுத்தான்

தத்தை கணவன் அபாயம் அறிந்தாள்"
''இத்தருணம் அவனைக் காப்பேன்
எத்துயரும் அவனை அணுகாது'' வேண்டினாள்
தத்தை செயல் உணர்ந்தான் சீவகன்
( தத்தை : காந்தருவதத்தை , முதல் மனைவி )

''என்னால் அவளுக்கு சிரமம் வேண்டாம்''
தன் தோழன் சுதஞ்சணனை நினைத்தான்
நன்கு தெரிந்தது சீவகன் துன்பம்
மின்னலென அவனை வானுலகம் கொணர்ந்தான்

நண்பன் சீவகன் மார்போடு தழுவினான்
விண்ணதிர அவனை வரவேற்று உபசரித்தான்
உண்ண அறுசுவை உணவு படைத்தான்
நண்பனோடு யாழ் மீட்டி மகிழ்ந்தான்

புயலும் மழையும் புரட்டி எடுக்க
செயலற்ற மதன் சீவகனைத் தேடினான்
பயம் மன்னனுக்கு என்ன பதில் ?
கயவன் மதன் திகிலோடு சிந்தித்தான் .

எப்படி எவ்வழி சீவகன் மறைந்தான்
செப்படி வித்தை, நடந்து விட்டதே
இப்படி பலவாறு நினைந்து குழம்பினான்
வம்பன் மதன் திக்குமுக்காடினான்
(வம்பன்: பயனற்றவன்)

ஏதிலான் ஒருவனை கொன்று சிதைத்தான்
மீதிக் கதையை இவ்வாறு உரைத்தான்
''பாவியை போரில் கொன்று குவித்தேன்
சேதி சொல்லவே வந்தேன் மன்னா''

சீவகன் இறந்தான் நம்பினான் கட்டியங்காரன்
இவ்வுலகில் சீவகன் இனி இல்லை
''அறம் வென்றது, என்னை வெல்வாரில்லை.''
சிறப்புப் பரிசுகள் பாராட்டினான் மதனை
(குணமாலையார் இலம்பகம், முற்றும் )

தொடரும்...

கவிஞர் ந. திருக்காழு

# ஏன்? எதற்கு? இப்படி?

கண்ணில் ஏன் மீன் வளர்க்கிறாய்
காதில் ஏன் தேன் வார்க்கிறாய்?
உன்னில் ஏன் என்னை ஊற்றினாய்?
என்னில் ஏன் உன்னை மாற்றினாய்?

விழியில் ஏன் வாளை வீசினாய்
குழலில் ஏன் காரை கூட்டினாய்?
இதழில் ஏன் மலரை காட்டினாய்
நுதலில் ஏன் பிறையை பூட்டினாய்?

கண்ணத்தில் ஏன் கனியை தேக்கினாய்
எண்ணத்தில் ஏன் வண்ணத்தை கலக்கினாய்?
இடையில் ஏன் மின்னல் வெட்டினாய்
மடையில் ஏன் என்னை மடக்கினாய் ?

தேகம் ஏன் சந்தனம் ஆக்கினாய்
தாகம் ஏன் தனிக்காது போக்கினாய்?
முழுமதியை ஏன் முகமாக்கினாய்
முகிலை ஏன் குழலாக்கினாய்?

நடையை ஏன் மயிலாக்கினாய்
நாணத்தை ஏன் உடையாக்கினாய்?
கரும்பை ஏன் உடம்பாக்கினாய்
கடித்து தின்ன ஏன் தடையாக்கினாய்?

பார்வையால் ஏன் பற்ற வைக்கிறாய்
பஞ்சாய் ஏன் பறக்க வைக்கிறாய்?
எதிலும் ஏன் விஞ்சி நிற்கிறாய்
எத்தனை வழியில் என்னைப் வதைக்கிறாய்?

இரவும் பகலும் ஏன் எனை வதைக்கிறாய்
கனவிலும் வந்து ஏன் கதையளக்கிறாய்?
அந்தியிலும் சந்தியிலும் என்னை அள்ளிக்குடிக்கிறாய்!
அன்னியர் போல் ஏன் அலைக்கழிக்கிறாய்?



முத்தன்ன புன்னகையை ஏன் மூடி மறைக்கிறாய்
முகைதேடும் வண்டுக்கு தடை என்கிறாய்?
அருவியென ஏன் குதித்து ஓடுகிறாய்
விழி நீரில் ஏன் உப்பை சேர்க்கிறாய் ?

உண்ணும் உணவு
திண்ணும் வெற்றிலை நீயாகிறாய்
பருகும் நீரும்
பார்க்கும் காட்சியும் நீயாகிறாய்?

கவிஞர் புஷ்பா குமார், திருப்போரூர்

# உரக்கச் சொல்லும் காற்று

ஜன்னல்
திரைச் சீலையை
திறப்பதும் மூடுவதுமாக
இருக்கிறது காற்று.
காற்றிடம் சற்று
பொறுமைகாக்கச் சொல்கிறேன்.

நீ கவிஞனாக இருக்கலாம்
நான் பஞ்சபூதங்களில் ஒருவன்.
எனக்கு நீ கட்டளை இடாதேயென்று
சற்று காட்டமாகவே
கோபப்பட்டக் காற்று.

நான் பொறுமைக்காக்க
நேர்ந்தால்
எல்லோருடைய கதியும்
அதோகதியென்று
உரக்கச் சொல்லிப் பிரிகிறது
காற்று.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்


# அன்பே வேதம் - அறிவே தெய்வம்

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று,
கூவி அலையும் அறிவிலிகாள்!
பல்லாயிரம் வேதங்களை நீர்
பயின்று என்ன கண்டீர்?

அன்பு ஒன்றே வேதம்!
அறிவு ஒன்றே தெய்வம்!
அதை நீர் அறியீரோ?

வேத வியாசரும்,
சிலுவையில் ஏறிய கிறிஸ்துவும்,
தியாக முகமதும்,
குரு நானக்கும்,
கௌதம புத்தரும்,
போதித்த வேதம் அன்பே!
பகுத்து அறிவதே இறை!

என்றே பலவாற்றானும்
பன்னி பன்னி சொன்னாலும்;
பகுத்தறிவு பாதையை காணாமல்
கண் மூடி இருந்து,
பகை கொண்டு,
என்ன கண்டாய்!



இறையின் இருப்பை
அறிந்தாயா; இன்றுவரை.
பகுத்தறியும் இறையை அறி.
அன்பின் மறை வழி நில்.

இறையை நீ தவறாமல் அறிவாய்.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# சகவுயிரே பெண்

பத்தரை மாற்று தங்கம் எனவும் வேண்டாம்
முத்து மணி மாலை எனவும் வேண்டாம்

சித்திரை மாத மாருதம் எனவும் வேண்டாம்
சித்திரம் போலொரு மேனகை எனவும் வேண்டாம்

பத்தினி புனித தேவதை கூற வேண்டாம்
வித்தகியென புகழுரை எதுவுமே வேண்டாம்

மொத்தத்தில் யாம் கேட்பது யாதெனில்
சித்தத்தை நோகாத மென்னணுகல்தான்

சத்தியம் செய்து தந்திட வேண்டும்
சகவுயிரே பெண்ணெனும் எண்ணம் வேண்டும்



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# இந்தியின் செருக்கு நறுக்கும்

பொன்னியின் வேர் அறுக்கும்
அரம்பர் பொசுங்கி போக.
பழிதீர்ப்பாள் பொன்னி.

தமிழ்ப் பிள்ளைகள் நாவை
சிறை பிடிக்க துடிக்கும் இந்தி.
இந்தியின் செருக்கு நறுக்கும்
தென்னவர் தீந்தமிழ்.




ஆக்கம் இழைத்த கல்வி
அல்லல் அகற்றும் தெள்ளியர்.
நல்லோர் ஆட்சி.

இன்னா நிறை பொழுதுகள்
இரைப்பை நிறைய வழியில்லை.
கயவராட்சி காட்சிகள்.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# அகமகிழ வந்தாய் எழிலே!



என்னுள் புகுந்து
எனை ஈர்த்தவளே
எண்ணத்தில் நிறைந்து
எளிதாய் கவர்ந்தவளே

எண்ணும் பொழுதெல்லாம்
எனக்குள் ஆனந்தமே
நான் அகமகிழ
வந்தாய் எழிலே

உந்தன் நினைவுகளே
உள்ளத்தில் ஓசையானதே
உருகியப் பனித்துளியாய்
உன்னுள் கரைகிறேனே

சஞ்சலம் போக்கியே
சந்தோசம் தருகிறாயே
இன்பத்தின் ராகமாகி
இதயத்தில் கீதமானாயே

உறவாகித் தழுவிட
உன்னிலை ஆனேனே
கனிவானப் பார்வைதனில்
கலந்திட்டேன் உன்னுள்ளே

கார்கால ஞாபகங்களில்
காதலை உணர்ந்தேன்
ஊஞ்சலானது நெஞ்சம்
ஊடலேதும் இல்லாமலேயே

ஐக்கியமானாய் வாழ்வில்
ஐவிரல்களைப் பற்றியே
வசந்தத்தின் தேவதையே
வந்திட்டாய் வரமாகியே

நித்தமும் உன்னாலே
நித்திரை தொலைத்தேனே
நிம்மதியானேன் கண்ணே
நிழலது விலகியதாலே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# மண்(ன) சுமை

மதிப்பில்லா மகுடங்களாய்
மண்ணுக்கு சுமைகளாகினேன்
சுவையில்லா சுவைகளாய்
சுவடுகள் தொலைத்தேனே

மலராத மலர்களாய்
மறதியில் நின்றேனே
விடியாத விடியலும்
விழித்தேடி அலைந்தேனே

கருவிழியில் கலைந்து
கருவறையில் நுழைந்தேனே
மண்(ன)சுமை தீருமோ
மாறாத உலகிலே



என்றோ ஒருநாள்
எண்ணங்களில் படர்ந்து
கல்வியின் சாரலில்
பட்டங்களாய் நினைந்தேனே

வாட்டங்களில் மத்தியில்
ஓட்டங்களும் குறைத்தேனே
இ(எ)ன்றும் பொழியாத
வானவில்லாய் கரைந்தேனே

வாடாத மலராய்
காகிதத்தில் கழிந்தேனே
ஊடுருவி கிழிக்கும்
காற்றின் வேகமாய்

நீங்கி மோதும்
நீர்நிலைப் போக்கிலும்
உடையாத உண்டியலில்
கீறலில் நெளிந்தாலும்

ஆர்ப்பாட்டம் போராட்டம்
வாழ்க்கையில் சேரட்டும்
நிதிக்கு விலைப்போக
விலைமாதராய் இல்லாமல்

நீதிக்கு உழைத்திடுவோம்
மரணத்தை சுவாசத்திடுவோம்
விழுந்தாலும் விதையில்லாமல்
புதுவிடியலாய் எழுந்திடுவோம்

கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை

# தொலைத்த உறவுகள்

பள்ளிப் பருவத்தினிலே மிட்டாய் வாங்கி
உண்ட பாட்டியைத் தொலைத்து!
வேறு ஊருக்குச் செல்கையிலே
உடனிருக்கும் நட்புப் பட்டாளத்தைத் தொலைத்து!



கல்லூரிக்குச் செல்கையிலே
பள்ளி நண்பர்களைத் தொலைத்து!
பணிக்குச் செல்கையிலே
கல்லூரி நண்பர்களைத் தொலைத்து!

திருணமாம் புது உறவுக்காக
இல்லத்தில் உள்ளவர்களைத் தொலைத்து!
கூட்டுக் குடித்தனத்திலிருந்து
தனிக் குடித்தனம் போனதனால்

தாத்தா பாட்டி என்ற
அருமையான பொக்கிசங்களைத் தொலைத்து!
மாமா அத்தை போன்ற ஏனைய
ஆசான்களைத் தொலைத்து வாழ்வதும் வாழ்க்கையோ?

கைக்குப் பக்கத்திலுள்ள உறவுகளைத் தொலைத்து விட்டு
அயல்நாட்டுக்கு காணொளி மூலம் பேசுவதும் முறையோ?
ஒவ்வொரு உறவும் நமக்குக் கிடைத்த வைரங்களே!
வைரத்தை பட்டை தீட்டுவது போல உறவுகளைக் காத்திடுவோம்!

பொக்கிசமாய் உறவுகளை சேமித்திடுவோம்!
கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்தே உவகை கொண்டிடுவோம்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நிலைக் கொள்வதில்லை

காதல் கொண்ட மனம் புண்பட்டாலும்
பிற்படுத்துவதோ!
தள்ளி போவதோ இல்லையே.
பாசத்தின் எல்லையில் கோபமெல்லாம்
வெறும் துகள்களாக போய் விடுகிறது.

பிடித்தமான உறவின்
நேரமிடல் நமக்கென குறையும் போது
கண்ணீரில் கரைந்து
உணர்வைத்தொலைத்து
பசி தூக்கம் மறந்து கிடக்கும் மனதும்.



பிடித்த உறவின் ஒற்றை அணுகளில்
அகலில் மற்றவை மறந்து துள்ளிடும்
புன்னகை மலர் சுமந்த படி.
வெடித்து சிதற கொதித்த மனதோடு
போராடும் நிலைகள் யாவுமே .

ஒற்றை நிமிடத்தினுள் பற்றுக்கொண்டவரின்
பேச்சிலோ? குறுந்தகவலிலோ? அழைப்பிலோ?
ஏதொன்றில் ஒற்றிக்கொள்கிறது.

உலகமே விடிந்தாலும் வாழ்வு இருண்டதைப்போல
வதனம் வாடி எப்போதென்றாலும்
அழுது வெடிக்க காத்திடும் மனம்
மயங்கித்தான் போகிறது பிடித்த உறவில்.

காதல் இல்லையென்றால் ; மனிதன்தான் ஏது?
மோதல் கொண்டாலும் மோதிக்கொண்டாலுமே
பிரிதலை விரும்புவதில்லை காதல்.

காதல் என்னுள் உனக்கெனகாத்துக்கிடக்கிறதே
நீ ஏனோ தாமதித்தாலும்
வந்து சேர்ந்தாகுவாயென நான்
காத்திருப்பும் காதலுக்கு அழகு சேர்க்கிறதே.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (புத்தளம்)

# தேனினிய ரமழான்

சொப்பனம் நிறைந்த சுவர்க்கம் தரும் மாதம்
ஏழையவனின் பசி உணர் மாதம்.
தீ செயல் போக்கித் தௌபா செய்திடும் மாதம்
நற்செயல் போற்றித் தூயுள்ளம் செதுக்கிடும் மாதம்.
தம்மிடம் இறைஞ்சுபவனுக்குப் புகட்டும் மாதம்
இறைவனிடம் நாம் இறைஞ்சும் அருள் பொழி மாதம்.

பாவக்கறை போக்கிடும் மாதம்
பசிபட்டினி உணர்த்திடும் மாதம்
அநியாயங்கள் ஒழித்திடும் மாதம்
ஈமானிய அனுபவங்கள் பெற்றுத் தந்திடும் மாதம்.



இராத் தொழுகை எங்கும்
ஒளி விளக்காய் மின்னிடும் மாதம்
பயம் களைந்து இரவெங்கும்
சலசலப்பான தேனினிய
பிரார்த்தனைகள் நிகழ்ந்திடும் மாதம்.

சுவன வாசல்கள் திறக்கப்படும் மாதம்
சுகந்த வாசங்கள் வீசிடும் மாதம்
ஷைத்தான் விலங்கிடப்படும் மாதம்
ரய்யான் வாசல் திறந்திடும் மாதம்.

யாவரும் போற்றும் மாதம்
அனைவரும் காத்திருக்கும் மாதம்
ஈமான் ததும்பும் மாதம்
இன்பம் பெருகும் மாதம்
நம்மைச் சீர்திருத்திக் காத்திடும் மாதம்
அதுவே இத்தேனினிய
ரமழான் மாதம்.

கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி, (கிழக்கிலங்கை)

# வேடிக்கை பார்க்கிறேன்

ஊற்றெடுக்கும் என் எண்ணலைகளை
தடுப்புக்கள் இட்டு
முடக்கிட நினைக்கவில்லை நான்.
ஊற்றெடுத்து முடியும் மட்டும்
ஒதுங்கியே நின்றுகொள்கிறேன்.

ஊற்றதையோ
எழுத்துக்கள் மூலம்
உருக்கொடுத்திட எண்ணி
முனைகையிலே
எண்ணலைகளிலே
ஊற்றெடுத்தவையோ
உருவெடுக்க மறுத்திடுகையிலே
என்னதான் செய்வது நான்?

அதனால் தான் முனைவதையும் விட்டுவிட்டேன்.
எண்ணவலைகளுக்குள்ளே
ஊற்றெடுக்கட்டுமென.

முனைவதை விட்டதும்
எண்ணலைகளோ ஊற்றெடுத்துக்கொள்ளத்
தொடங்கிவிட்டனவே.
நானோ வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறேன்
அவற்றை.



கவிஞர் அறூபா அஷ்லா, கல்முனை (இலங்கை)

# செந்தூரமும் என்செம்மகளின் கோபமும்



உதிர்ந்த பின்பும்
உதித்திட துடித்து நிற்கும் மலரும்
கணமும் செந்தூரத்தின் வண்ணம் போல,

செவ்விதழாள் செறிந்து
செங்கதிரோன் செவ்வாயோன் போல
அகமதை முகமுழுவதில் மலர்ந்து
படரவிடுவதை தூரத்திலிருந்து
நினைக்கையிலே

வண்ணமும் பரவசமும்
உதித்து உதிர்கிறது செந்தூரத்திரவம்
பாய்ந்திடும்
செவ்வியத்திலுமே.

கவிஞர் சீ. பிரகாசி மேரி, உடப்பன்குளம்

# பெண்ணின்றி ஏது பெருமை

பெண்ணே நீ அதியத்திலும் அதிசயம்
பெண் உலகில் ஆளப் பிறந்தவள்
கஷ்டத்திலும் புன்னகையோடு வலம் வருபவள்
கனிவாய் பேசி குடும்பத்தை அழகாக்குவள்
வலியிலும் வழியைத் தேடி காண்பாள்
அன்னையின் அமுத ஊற்றாய் ஆனவள்
அரவணைப்பில் கற்கண்டாய் இனித்து நிற்பவள்
சுமைத் தாங்கியாய் சுமந்து நிற்பவள்
சுகத்துக்கங்கள் எல்லாவற்றையும் கடந்து வருபவள்
ஏறாத துறைகள் எங்கும் இல்லை
ஏணியாய் உயர்ந்து வளர்ந்து வருபவள்
பெருமை ஏதெனில் பெற்ற கல்வி
பெற்றவருககும் எப்போதும் பெருமை சேர்த்தவள்
ஓயாது உழைத்து கொண்டே இருப்பவள்
ஓடிஓடி வேலை செய்தாலும் ஓயாதவள்
அவளில்லா உலகம் யாருக்கும் இல்லை



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம், நாகர்கோவில்

# தமிழ் தாய்

அகரத்தில் பிறந்து
சிகரமென திகழ்பவளே!

ஆதி தொடங்கி
அகிலம் ஆள்பவளே!

இயல் இசையுடன்
நாடகமாக வாழ்பவளே!

ஈரடி குறள்களால்
மாந்தரை திருத்துபவளே!

உயிரும் மெய்யுமாய்
இரண்டுற கலந்தவளே!

ஊற்று சுனையென
இலக்கிய சுவையானவளே!




எட்டுத் திசையிலும்
உயிர் காற்றானவளே!

ஏழிசை நாயகியாய்
என்னுள் உறவாடுபவளே!

ஐப்பசி மழையாய்
என் கற்பனையானவளே!

ஒப்பில்லாத என்
தாய்மொழி நீயே!

ஓசையின்றி வாழும்
என்னுயிர் நிழலே!

ஔவை மொழியாகி
கந்தனருள் பெற்றவளே!

ஃ என ஆழ்மனதில்
தனித்து இருப்பவளே!

என் ரௌத்திரத்தில்
பிறந்த *அனலே*!

என்னுள் தேயாத
சிந்தனை *நிலவே*!

என் செந்தமிழ் தாயே
நீ நீடோடி வாழியவே!

கவிஞர் அனல் நிலவன், திண்டுக்கல்

# மௌனங்கள்

மௌனங்கள் உதிர்த்து
விட்டுச் செல்லும்
அன்பின் வெளிப்பாடுகள்

கேட்பாரின்றி
கேவிக் கிடக்கிறது
தனிமையின் விளிம்புதனில்

மொழிபெயர்க்கப்படும்
இவ்வூமையின்
உரை மொழிகள்
ஏற்படுத்தும்
உள்ளக் கிளர்ச்சியின் முன்

பேரண்டத்தின்
பெருவெடிப்புகள் எல்லாம்
பொருளற்றே போய் விடுகின்றன



கவிஞர் நிவேதிகா பொன்னுச்சாமி

# முதலிலிருந்து

முதலிலிருந்து
அப்படியே
எழுதத் துவங்குகிறேன்
தோன்றும் அனைத்தையும்,
முடிக்கும் தருவாயில்
வழுக்கிச் செல்கிறது
நூலிழையில்,
மீண்டும் முதலிலிருந்து.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# வெள்ளைக் காகிதம்

என் எழுத்துக்களின் முதல்
ஊர்வலம் வெள்ளைக் காகிதத்தில்
கிறுக்கல்களாய்

எந்தன் கவிதை வரிகளின்
போராட்டத்தில் காகிதங்கள்
நாள்தோறும்

தற்கொலை தடுமாற்றத்தில்
குப்பை கூடையில்
மூச்சுத்திணறலாய்

நாட்களின் நடைபாதையில்
எனது வரிகளும் உயிர்தெழுந்தது
உற்சாகமாய்

எனது காகித காதலியின்
முகத்தில் எனது கவிதை
கலவைகள் வண்ணங்களாய்

அன்று நிர்வாணமாய் நின்ற
வெள்ளை காகிதம் இன்று
என் கவிதை ஆடை அணிந்து

முழு நிலவின்
அழகான முகவரியாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நாங்கள் மானிடர்கள்

பழக்கம் ஆனால் வழக்கம் ஆகிடும்
ஈடுபாடு போதையோடு அடிமை ஆக்கிடும்.

கையில் என்ன பணம் இருக்கா?
காலில் என்ன வலி இருக்கா?
மணத்தைத் தொடங்கும் முந்தைய முடிவா?
பிணத்தைத் தூக்க வலிமை இல்லையோ?

குடும்பச் சுமையா? பொறுப்புகள் ஏராளமா?
துன்பம் என்ன துயரம் என்ன?
நிகழ் உலகின் நினைவிலிருந்து இறங்கிடவே!
துணையாய் ஒருவன் இறக்க அழைக்கிறான்.

கவலை மறக்க உலகைத் துறக்க
தன்னை விடுக்க தரையில் மிதக்க
அலைந்து திரிந்து அமராமல் எழுந்து
மருந்தகம் ஓடு மதுவை வாங்க.

அவசர ஊர்தியில் மருத்துவம் பார்த்தும்
அதிசய மூலிகையில் முறிவைக் கொடுத்தும்
கண்ணைக் கவர்ந்து மனதை இழுத்தது
நிற்கா மனிதக் குடியை அழிந்திடவே!

காரணம் ஆயிரம் கட்டிப் போட்டாலும்
பானம் என்றே உணர்வுகள் தூண்டி
மதுவைச் சுவைத்து மரணம் தேடும்
மானிடர்கள் உலகில் வாழும் நாங் *கள்*.

புதியன புகுந்திட மெருகேற்றி அளித்திட
தெரிந்தும் அருந்தும் தெள்ளிய அறிவோர்
தெளியாச் சிந்தையில் தவறும் சிதறலில்
எவரென அறியா புலம்பல் நீளும்.

திரையுலகு முழுதும் அவனின் பங்கு
நொடியேனும் தலையைக் காண்பித்துச் செல்வான்
விழிப்புணர்வோ குழியில் தள்ளும் விளம்பரமோ
அறிவிப்பும் இருக்கும் கேடு என்று.



எதிர்ப்புகள் தொடர்ந்திட இழப்புகள் ஏற்றிட
உறவுகள் வருந்திட மனங்கள் பிரிந்திட
திருந்திட மறுக்கும் திருப்தியற்று தூரத்தில்
இறுதியாகவொரு முறை என்றே தொடரும்.

கவிஞர் ரா. மலர்கொடி, திருநெல்வேலி

# மானம்

## அதிகாரம் : 97

இன்றியமையா சிறப்புகளை
உடையவனாயினும் இழுக்குவரும்.
செயல்களை செய்யாதிருப்பதே
உயர்குடியோனின் குடிப்பெருமையாம்.

புகழொடு நல்லாண்மையும்
தேடும்வழியில் உயர்குடியோன்.
தன்குடிப்பெருமைக்கு ஒவ்வாசெயலை
ஒருபோதும் செய்யலாகார்.

செல்வச்செழிப்பில் பணிவும்
வறுமைகாலத்து பணியாதுயர்வும்.
ஒருவனுக்கு மானங்காக்கும்
பெருமையும் புகழுமாம்.

உயர்நிலைதவறி தாழ்நிலையடையும்
மக்கள் தன்தலையினின்று.
உதிர்ந்துவீழ்ந்து தாழ்வுறும்
மயிர்போல் இழிவடைவர்.

குடிப்பிறப்பிறப்பின் பயனால்
குன்றுபோலுயர் நிலையோர்.
குன்றிமணியளவு இழிச்செயல்
செய்திடினும் தாழ்நிலையடைவர்.

இகழ்வோரின் பின்சென்று
பணியும்நிலை புகழ்தராது.
தேவருலகிலும் சேர்க்காது
எனிலது என்னபயனளிக்கும்?

இகழ்வாரின் பின்சென்று
பொருள்சேர்த்து வாழ்வதிலும்.
வறுமையில் நின்றழிந்தான்
எனப்படுதல் சிறப்பாம்.



மானம்

பெருந்தகைமை அழியும்நிலையில்
இறவாமல் மானமிழந்து.
உடல்காத்து வாழும்வாழ்க்கை
இறவாமைக்கு மருந்தாகுமோ?

உடம்பின் மயிரொன்று
உடம்பினின்று வீழ்ந்திடின்.
உயிர்நீக்கும் கவரிமான்போன்றோர்
மானத்திற்காய் உயிரையுமிழப்பராம்.

இழிவுநேரின் உயிரைவிடும்
மானமுடையோரின் புகழ்வடிவை.
எக்காலமும் உலகத்தார்
கைதொழுது போற்றிடுவர்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# வார்த்தைகளுக்கு உயிர் உண்டு

வார்த்தைகள்
வார்த்தைகளுக்கும்
உயிர் உண்டு
குறையை கூட நிறையாய்
சொல்லுங்கள்
நேர்மையான வார்த்தைகள்
உங்கள் குணத்தை அலங்கரிக்கும்.
வார்த்தைகளால் மற்றவரை
வாழ வையுங்கள்.
கோபத்தின் போதும்
மன குழப்பத்தின் போதும்
மௌனம் பழகுங்கள்.
வன்மம் இல்லா வார்த்தைகளில் மனிதமும்
வளரட்டுமே.



கவிஞர் உஷா தங்கவேல், அரியலூர்

# மீட்டாத வீணையொன்று

கனவுகளை கடத்திச்
சென்று கலி நடனம் புரிகிறாய்
இன்னும் பேசாத மொழிகளை
இதயத்தில் எழுதிச் செல்கிறாய்
கற்றைக் குழலின் நீளம் அறிய
காற்றிடம் தூது அனுப்பினாய்
அந்தி வானின்
ஆர்ப்பரிக்கும் அழகை மறைக்கும்
வானவில் நீ என்றாய்
இன்னும் எழுதாத ஓவியத்தின்
ஏடு அறியாத காவியத்தில் முகிழ்ந்த
இதழ் பிரிக்காத மோகப் புதையல்
உன் விழிக் கனவின்
ராகங்களைத் தேடும்
மீட்டாத வீணையொன்று பூத்திருக்கிறது
உன் வரவிற்காக.



கவிஞர் யாழிசைசெல்வா

# மறுநாள்

மறுநாளை
சிறப்பாக வடிவமைக்க
நீளும்
முந்தைய இரவின்
குருசேத்திரத்தில்
வெற்றி பெறும்
அம்மாக்களின்
காலை
தோற்றுத்தான் போகிறது
பள்ளி சென்ற
குழந்தையின்
அடையாள அட்டையை
அலமாரியில்
பார்க்கும் பொழுது



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# ஆழ்மனது ஆழ் கடலது



ஆழக்கடலின் அடி தொட்டவுடன் உண்டு!
ஆழ்மனதின் நீள அகலம் அறிந்தவன்
எத்தனை மர்மங்கள்?
எத்தனை இரகசியங்கள்?

புலனாய்வு பலனற்று போகும்
பொய் அறியும் கருவி விழி பிதுங்கும்
உள்ளத்திலே பூட்டி வைத்தது
உடையாமல் கல்லறை அடை காக்கும்

அகழ்வராய்ந்து கண்டவர் விண்டிலர்
விண்டவர் இதுகாறும் கண்டிலர்
ஆணுக்கு பெண் சளைத்தவரில்லை
இதில் பால் பேதம் ஊடுருவவில்லை

உடுக்கை இழந்த வேளை இடுக்கண் களையும் நட்பது
நகமும் சதையுமென ஊர் மெச்சும்
ஒருத்தியை மணந்து வாழப் போகிறாரோ?
முகவாயில் இடித்து புறம் பேசும் ஊர்

சிரித்து மழுப்பி நகர்ந்து விடுவர்
சில்லறை சிதற விலகி விடுவர்
ஒரு ஜோடி கண்ணில் நீர் வழிந்தால்
மறு ஜோடியில் உதிரம் கொட்டும்

அருகருகே உறக்கம் அன்றும்
அவன் கனவில் இவன்
இவன் கனவில் அவன்
கொலை வாள் ஒருவன் கையில்

கொலையுண்டான் மற்றொருவன்
இருவேறு கண்கள்! ஒரே கனவு!
அலறி விழித்ததில் வியர்த்து கொட்டியது
உறக்கம் கலைந்தது தோழனுக்கும்
விழிகளால் வினவுகிறான்

யாரோ ஒருவன் கொல்ல வருகிறான்
முகம் முழுவதுமாக தெரியவில்லை
குறுக்கே விழுந்து நீ கொலையாகி
சிரித்துக் கொண்டே உறங்கிப் போனான்
உறங்காத விதை விருட்சம் ஆனது.

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# கண்ணா

சுட்டும் விழியிமை கழன்று
சுட்டி காணும் போழ்தில்
சுமை கழன்றோடும்
எனது விழிகளில்!



கவிஞர் ஜெயப்பிரபா

# ஆண் மகன் நானும் உன்னால் கருத்தரித்தேன்

நான் உன்னை நினைத்து ஏங்கித் தவித்த
எத்தனையோ லட்சம் நிமிடங்களுக்குப் பிறகு
நீயும் என்னை காதலித்ததால்
நானும் கூட கருத்தரித்தேன்
உன் காதல் குழந்தையை
நான் காலமெல்லாம் என் கருவில் சுமக்க.



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# நட்சத்திர வாழ்க்கை

நாள்கள் கரைந்தாலும் நம் கனவுகள் கரையாது
நழுவிடும் நேரத்தோடு நாமும் நகராமல்
நிலையாக நிற்பவன் வெற்றிக்குப் சொந்தம்
நிழலென நீங்கிடும் சோகத்தின் போகம்!

தோல்விகள் வந்து தவிக்கச் செய்தால்
தொலைவில் வெற்றியின் ஒளி தெரிகின்றது
மண்ணில் விழுந்தால் மழையாய் எழுந்திடு
மௌனத்தின் உள்ளே முடிவுகள் இல்லை!

அவதூறு வந்து அடிக்க முயன்றால்
அசைந்திடும் கால்கள் பறக்கத் தொடங்கும்
வாழ்வின் ஒவ்வொரு கல்லும் பாடம்தான்
வானம் வரை பறக்க விரல்கள் சாத்தம்!

நம்பிக்கை கொண்டால் நாளை நமதே
நட்சத்திரம் போல நீ வாழ்வாய்!



கவிஞர் பானு அப்துல்லா

# தந்தை


என்னை உலகிற்கு
அறிமுகம் செய்த நல்லாசான்

என் வாழ்க்கைக்காக
தன்னுடைய வாழ்க்கையின்
தியாகி.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# பெண்மை பேருலகின் உண்மை



அன்பைத் தேடு அதில்
அழிவில்லாத பொக்கிஷம் அவள்.
ஆற்றலைத்தேடு அவளே அற்புதம்
இன்னலை தீர்க்கும் இலக்கணம் அவள்
ஈடில்லா அன்பில் ஈர்ப்பும் அவள்
உன்னத நெஞ்சின் ஊக்கம் அவள்
ஊற்றாக சுரக்கும் அன்பின் ஏற்றம்அவள்

எண்ணிஎண்ணிப் பார்த்தாலும்
எளிதென நினைத்தாலும்
ஏகாந்தம் என்பதில் வேதாந்தம் அவள்
ஐம்பெரும் பூதங்களின் சக்தி அவள்
நவகிரகங்களின் யுக்தி அவள்
ஒவ்வாமை இல்லா சக்தி அவள்
ஓயா பணி செய்யும் பக்தி அவள்.

அன்பின் ஏமாளி பண்பின் பராக்கிரமம்
கடவுளின் படைப்பில் அவளே யாவும்!
அவளின்றி யாவுமில்லை.
தாயாய் மகளாய் தாரமாய்
தமக்கை யாய் தோழியாய்
ஆசானாய் ஆர்ப்பரிக்கும் ஆழிபோல
பல பரிணாமங்களில் பெண்

தாயாய் கருணை நிறைந்தவள்
தாரமாய் கடமை உணர்ந்தவள்
மகளாய் மகுடம் சூட்டுபவள்
தமக்கையாய் சலிப்பே. இல்லாதவள்
தோழியாய் தோள் கொடுப்பவள்
ஆசானாய் அனைத்துமானவள்

வாழ்வின் விடியல் மட்டுமல்ல
விடிவெள்ளி யும் பெண்ணே
உருவத்தில் மெல்லினம்
உருகுவதில் மேலினம்
அவளே பெண்ணினம்

கவிஞர் வ. சீ. கலைவாணி, நெய்வேலி

# வழிகாட்டும் உழைப்பு



உழைப்பின் மேன்மை உன்னதமாய் காட்டும்
இழையின் வரியாய் இணைந்து சிறக்குமே
கற்றலில் மேன்மை கடலாய் பெற்றாலும்
உற்றோர் இணைந்து உழைப்பில் சிறப்பே

கடின செயலை கனிந்து செய்தாலே
மடிந்த மனதும் மகிமை பெறுமே
பிழைப்பதற்கு வெளியில் பிறழ்ந்து சென்றிருந்தாலும்
வாழையாய் வணங்கி வாழ்த்தும் குடும்பமே

கோழையாய் வாழ்ந்தே கோடியில் நிற்காதே
பாழும் வஞ்சகன் பார்வை படாமலே
நிலையிலா உலகிலே நீயாக வாழ்ந்திடவே
கலையாக வளர்ந்தே களித்து சிறப்பாயே

எதிர்காலம் இனிமையாய் என்றுமே சிறக்க
கலையான காவியம் கடமை பெருக்குமே
நண்பரும் நன்றாய் நட்போடு பழகி
உண்பதை உரமாய் உரிமையில் சொல்வாரே

வருங்கால வளமை வயதான காலமும்
பெருமை கொள்ளுமே பெரிதாய் எண்ணுமே
மற்றோர் உழைப்பில் மலர்ந்து வாழ்ந்தே
பெற்றோர் மனதை பெரிதும் நோகடிக்காதே

எதிர்காலம் எண்ணி எடுத்த செயலை
பதராய் நினைத்து பகிராதே பூமியில்
வரியோர் வருந்தி வறுமையில் வாடுவதை
சிரியோர் சிந்தை சிரமம் கொள்வதில்லை

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# அலைகளின் நாதம்

எனக்கு என்ன
பிடிக்கும் அறிவாயோ
ஏதோ புரளும் ஓசையில்
நித்தமும் தேடலே

ஓடிய வருடங்கள்
இத்தனையா என்ற
ஆச்சரியம்
பூரணம் பெற்றதா
வாழ்க்கையின் நாட்கள்

கேள்விகணைகள்
வந்த வண்ணமே
அழியாத நினைவிடுக்கில்
தீராத ஏக்கத்தின் குரல்

அசைந்த திரைச்சீலையின்
ஆலாபணையில்
காற்றின் சுதந்திரம் முகத்தை
மோதும் நிமிடம்

தேடலை தேடியபடியே
மனதுக்குள்
ஓர் அரண்மனை போதுமா
எண்ணங்களை குவித்திட

சில நேரங்களில்
அன்னியமாகும் மனதும்
அசைய மறுக்குது



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# பொன் துளி

வழியைக் தந்திடும் உழைப்பு
நம் வாழ்வை உயர்த்திடும் உழைப்பு
ஓய்வுக்கே ஓய்வுகொடுத்து உழைப்புக்கே
முதலிடமாய் உழைப்பவரே உயர்தவர்.

ஒவ்வொரு நாள் மணித்துளியும்
உழைப்பு என்னும் மந்திரம்
நம் உதிரத்திலே கலந்திட்டால்
நம் வாழ்வு சிறப்புடன் மற்றவர்களுக்கும் வழிகாட்டுமே.

உழைப்புக்கு அஞ்சாத உடலும் மனமும் இருந்திட்டால்
ஒவ்வொரு துளி வேர்வையும் *பொன் துளியாய்* மாறிடுமே
இமயம்கூட சிறுமலையென தோன்றிடுமே.

உழைப்பாலே சிகரம் தொட்ட சாதனையாளர்கள்
உலகிலே ஆயிரம் உண்டுங்கே
ஆசை என்னும் எண்ணங்கள் அத்தனையும் வென்றிட
அகிலத்தில் புகழோடு அனைவரும் போற்றிட
உழைப்பு என்னும் ஆயுதம் உயிரைப் போல உயர்த்திடும்.

நல்ல குணம் இருந்திட்டால் குன்று போல உயர்ந்திடலாம்
அக்கம் பக்கம் அனைவரையும் அரவணைத்து சென்றிட்டால்
உழைப்பாலே ஒன்றுபட்டு உயர்வான வாழ்வுதனை
எல்லோரும் அடைந்திடலாம்.

உழைப்பு என்னும் வெளிச்சமே வாழ்க்கை என்னும்
பாதைக்கு நல்லதொரு வழிகாட்டி உணர்ந்திடுவோம்
உழைத்திடுவோம்.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# என் வாழ்வையுமே!



வெட்டிடும் வார்த்தைகளாலே
வேல்விழியாளையும் ரணம் செய்தாயே
வெட்டிடும் பார்வையும்
வேரறுத்திடவா வேலை செய்கிறாய்

வெட்டிவேர் வாச காதலையும்
வெட்டி ஒதுக்குகிறாயே
வெறுப்பு வந்த காரணமென்னவோ

வெதும்பி தவிக்கிறேனே
வேறுவழிதெரியாமலே
வெல்லமென கொஞ்சியே
வெட்கமும் பல கொண்டே

வேதனை கொடுக்கவா விரும்பினாய்
வெந்து தவிக்கிறேன் நானே
வெட வெடத்து போனேனே
வேல்அம்பு கூர் சொல்லால்

வெப்பம் தாளாமலே
வேற்றிடமறியாமலே
வேறுவழியின்றி வாழ்கிறேனே

வேகமான வாழ்வதிலே
வேட நாடகமானதே எல்லாமே
வேற்றுகிரகாவாசியானேனே

வேண்டாத தெய்வத்தையும் வேண்டியே
வேண்டுமென்றே விடாமல் கரம் பிடித்தேனே
வேண்டாமென்று நினைக்குமளவு

வெறியாக போன காரணமென்னவோ
வெகுதூர மணவாழ்விலே
வெகுநாளாய் விட்டுவிலகியது ஏனோ

வெண்ணிலவாய் ஜொலித்திவளை
வெறும் வானில் விட்டுவிட்டு
வேறிடம் சென்றுவிட்டாயே

வெட்டுக்கத்தியை கூர் செய்தாய்
வேட்டையாட நீ சென்றாய்
வெற்றிடமாக்கிவிட்டாயே என் வாழ்வையுமே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

உன் நினைவுகள் என்றும் இளவேனிற் காலம் தான்!
நீயோ என் நினைவுகளைக்
கூதிர்காலமாக்குகிறாய்!

##



பருவ வயது காதல்
வந்ததொரு காலம்!
முதுமையிலும் நினைவூட்டும்
ஒரு தலை காதல்
##

ஆழிப் பேரலைகள்
அவ்வப்போது வருகின்றன!
ஊழிக்காலம் தோறும்
மனித வாழ்வு தொடரும்!
##

வாழ்க்கையில் எல்லாம்
அளவோடு வேண்டும்
வெயிலும் மழையும்
அளவோடு போல

கவிஞர் சே.ரா. ஸ்ரீதரன், இலங்கை

# இட்டுக்கெட்டார் யாருமில்லை

விழித்தெழுந்து
பசித்திருந்து
தாகித்திருத்து
என்னபயன்
ஏழையின் பசி
உணராத வரை



அளந்து கொடுத்து
அள்ளிக் கொடுத்து
என்ன பயன்
உள்ளமறிந்து
இறையன்பு நாடி
ஈயாதவரை.

ஊரறிந்து
தர்மம் செய்தாலும்
என்ன பயன்
தேடியறிந்து
தேவையுணர்ந்து
கொடுக்காத வரை.

ஆடம்பரமாய்
மாளிகையில்
வாழ்ந்தென்ன பயன்
ஏழைகளாய்
மாற்றியணிய
ஆடையில்லாதவர்
பிணி தீராதவரை.

தேசத்தின்
நேசகர்களென
நாமம் சூடியென்ன பயன்
நாளுக்கு நாள்
யாசகர்கள் உருவாவதை
உணராத வரை.

வலக்கரமீதல்
இடக்கரம் அறியாமல்
இறைவனுக்காய்
ஈந்திடுக
இட்டுக்கெட்டார்
யாருமில்லை
என்பது முதுமொழி.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ், கம்பளை

# சிரிப்பொலி

துன்பத்தில் துவண்டபோது
இன்பத்தையே சுவைக்க மறந்தபோது
உறவுகள் விட்டுச்சென்றபோது

நட்புக்கள் தூரமான போது
பெற்றோரை தேடியும் கிடைக்காதபோது
துணையவனின் அன்பின்றி தவித்தபோது

அழகாய் கிடைத்த அன்புள்ளமே
என் உயிராக வந்த செல்ல மகளே

உன் சிரிப்பொலி
அனைத்தையும் மறக்க
செய்ததுவே

ஔடதமாக அனுதினம் என்னுள்ளே
உன் சிரிப்பில் நான் வாழ்கிறேனே
உனக்காக என்றும் நானிருப்பேனே



கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், இலங்கை

# என்னவள்

அவள்
என்னவள்
எனதானவள்
எனக்குமட்டுமானவள்
எனது
எண்ணமெல்லாமவள்.

பார்ப்பவர்க்கு
பரதேசியவள்
எனக்கு மட்டும்
பால்நிலவாயவள்.

நான் தவறு செய்தால்
எனைக் கண்டிக்கும்
ஆசானாய் ஆகிடுவாள்.

அவள் தவறு செய்தால்
நான் கண்டிக்கும்
மாணவியாய்
மாறிடுவாள்.

எப்போதும்
எனக்கு
நல்ல மனைவியாய் இருக்கின்றாள்
என் வாழ்வினில்
நல்ல துணைவியாய்.



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல மாத்தளை

# பயனென்ன

நீ
சாற்றிய
கதவை நான்
தட்டப் போவதும்
இல்லை உன்னைத்
திட்டப் போவதும் இல்லை.
தச்சன் செய்த கதவென்றால்
தட்டியிருப்பேன் உடைத்திருப்பேன்.
தசையாலன கதவாச்சே அதை தட்டிப்
பயனென்ன உடைத்துத்தான் பயனென்ன.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# தொலையும் இளமை

இறைவன் படைத்த
இகத்தின் அருள்களில்
இளமையின் இன்பம்
இதமாய் நினைவில்

அசாத்தியங்களும் சாத்தியமாகும்
சாதிக்கத் துடிக்கும்
சாமானியனைத் தூண்டும்

நெஞ்சுரம் சுரக்கும்
நெடுந்தூரப் பயணம்
படரும் பார்வையில்
பயங்களும் சிதையும்

நினைத்ததை முடிக்கும்
நிறுத்தங்கள் இல்லை
நேர்வழி பிழைத்தால்
திருத்தங்களும் சாத்தியமில்லை



தீராத ஆசைகள்
தீர்ந்திடத் துணிவுகள்
தீய நட்புக்கள்
தீயாய்ப் படரவைக்கும்

போதை விழிகளுக்குள்
பேதை அழகு
போக வழியின்றி
சிறைக்குள் இதயம்

இரவின் போர்வைக்குள்
வீதியில் விழித்திருந்து
வீணாகும் பொழுதுகள்
விரயமென்றும் புரிவதில்லை

மதியை வெல்லும்
விதியின் பயணத்தில்
தொடராய்க் கலைகிறது
இளமை வானம்

கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா

வயிற்றுப் பிழைப்புக்கு புலம்பெயர்ந்து வந்தவர்கள்
அயர்ந்து இளைப்பாற அமர்ந்திருக்கும் கோலமிது!
மாளிகைகள் கட்டிடவே மண்,கல் சுமந்திடுவோம்!
ஓலைக் குடிசைகளில் வாழ்வதே எங்கள்நிலை!
அன்றாடம் உழைத்தால்தான் அடுப்பெரியும் வீட்டினிலே
என்பதே எதார்த்தம்! இந்நிலை என்று மாறும்?
கன்னத்தில் கைவைத்து கவலையுடன் அமர்ந்தவரின்
எண்ணத்தில் ஏதேதோ ஏக்கங்கள்! உயிரைப்
பணயம் வைத்து உழைப்போர்க்கு இன்னல்பல!
சுரங்கப்பாதை சரிந்த சோகநிகழ்வின் பாதிப்பு
ஈரமுள்ள நெஞ்சங்களில் இன்னும் தொடர்கிறதே!
வறியோர்கள் நிலைமாற காலம் கனிந்து
கருணையுடன் அருளாதோ? நாட்டின் கண்களாம்
பெண்களின் துயரங்கள் தீரும்நாள் எந்நாளோ?



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி, புதுச்சேரி

# கடல்

நான் கடலை உப்பாக்கிக் கொண்டிருந்தேன்
கொஞ்சமாக அள்ளி
சுடும் வெயிலில் போட்டான் மகன்
இப்போது உருகி ஓடுகிறது தன் பிறப்பிடம் தேடி கடல்.



கவிஞர் சி. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# காதல் இல்லாக் காதல் ஹைக்கூக்கள்

உடல் தேவையல்ல
உயிர்த்தேவையே
ஒவ்வொரு முத்தமும்
*

வேலை எதுவென
யோசனை இல்லை
நினைவில் நீ வந்தபின்
*

அழகை வெறுத்தவள்
என்னைக் கண்டதும்
அலங்கரிக்கத் தொடங்குகிறாள்
*

அத்தனை கடிதங்களிலும்
அறியும் மனம்
அவள் கடித வாசனை
*

குழந்தை பெற்றும்
குன்றா இளமையில்
அன்பைச் சுமக்கிறாய்
*

திரவியம் தேட ஓடினும்
திரும்பும் வரையும்
உயிரை முத்தத்தில் ஒப்பி.
*

நினைவு புகையும் நெருப்பு
நீ வருகையில் குளிரும்
நிஜம் வருகையில் எரியும்

உன்னைக் கண்டதும்
அழையா விருந்தாளியென
வந்துவிடுகிறது கவிதை
*

உன்னிதழ் பார்க்கையில்
உள்ளப்பாடல்கள்
ஒத்த இசை கேட்கின்றன.
*

சொற்களில் புயல்
சூறாவளி மழை பெய்கிறாய்
கவிதையென ரசிக்கிறேன்

கவிஞர் இளையவன் சிவா



முகத்தில் ரேகைகள் காலக்கோடு
அகத்தில் ரேகைகள் காலக்கேடு
***

வருடக்கணக்கில் அவதிப்பட்டு எதிர்ப்பார்த்து
இறந்தால் போதும் என்று வேண்டி விரும்பி
சிலர் இறந்த பின்னும்
திடீரென மாய்ந்தல் போல் கண்ணீர்
***

அந்திமாலை என்றெண்ணி விட்டேன்
சிவந்த மலை
எரிமலை.
***

UU◌்ரீ. ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்
மரியாதை நிமித்தமாக
(அவர் ஒன்றும் சொல்லமாட்டார்)
***

வயல் வரப்பு தொட்டிலில்
கவனிப்பாரற்று கிடக்கும்
கைக்குழந்தையின் சிரிப்பு
வேதனை
***

உலகத்திலேயே வலிமையான நெஞ்சம்
இதோ பெண் அழைப்பில் கண் கசியாமல் நிற்கும்
தந்தை
***

இருப்பதை காட்டிலும்
மும்மடங்கு வசதியாய் வாழ்வாள் என்றாலும்
இருவருக்கும் பிரிய மனமில்லை
மகளும் தந்தையும்
***

ஒரு ஆண் மகனுக்கான
அதீத மகிழ்ச்சியும் வருத்தமும் அளிக்கும்
ஒரே விஷயம்
மகளின் திருமணம்
***

மரங்களின் மூச்சு காற்று
பெருமூச்சு புயல்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# என்னைவிடவா?



மனிதன் குழப்பபயத்தில்
ஆர்வாரம் செய்யும்
மனஉணர்வுகளைப் பார்த்து
கடல் அலைகள்
என்னைவிடவா?

உடல் அழகை பார்த்து
உவகையுறுகையில்
பூத்துகுலுங்கும் மலர்களும்
மேகத்தில் இருந்துவரும்
காலைநேர சூரியனும்
அந்தி வானமும்
என்னைவிடவா?

கோபத்தை வெளிப்படுத்துகையில்
கடும்புயலில் படுவேகமாக
அசையும் மரங்கள்
என்னைவிடவா?

உணர்வை மறைத்து
வெளியே அமைதி காட்டுகையில்
நள்ளிரவு
என்னைவிடவா?
என இயற்கை கேட்கும் கேள்வி

***

## கொஞ்சமும் நிறையவும்

கேள்விக்கான பதிலாயும்
தேவைக்கான கேள்வியாயும்
புரிதலுக்கான உதட்டு மொழியாயும்
வெளியே கொஞ்சமும்

நல்ல நினைவுகளை ஞாபகப்படுத்தி
மகிழ்ச்சி கொள்ள
முந்தைய வெற்றிகளை
யோசித்து ஊக்கம் கொள்ள

பழைய சிக்கல்களிலிருந்து
தீர்வு கண்டதை எண்ணி
நம்பிக்கை கொள்ள
செயல்பாட்டு பயணம்
துல்லியமாய் அமைய
திட்டமிடலுக்காய்

நாளைய இலக்குகளை
எண்ணி வேகம்பெற
உள்ளுக்குள்ளே
நிறைய பேசுவோம்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# முகவரி தேடும் காற்று

சொந்தக் காலில் நிற்க விரும்பும் அரசு

அத்தியாயம் 2

(நவீனம்)



"ஆம் கொஞ்சநாளாக என் பிஸினஸை கவனிக்க வர மறுக்கிறான். சொந்தக் காலில் நின்று தனியாக வியாபாரம் செய்யப் போவதாக சத்யாகிரகம் பண்ணிக் கொண்டிருக்கிறான்."

"விட்டு விட வேண்டியதானே?"

"நான் இவ்வளவு ஓடி ஓடி சேர்த்து வைத்திருப்பது யாருக்காக.. இந்த பிஸினஸ் சாம்ராஜ்யத்திற்கு எனக்கு ஒரு வாரிசு இல்லை என்றால் எதற்கு இவ்வளவு அலைச்சல், மன உளைச்சல்."

"கொஞ்சம் விட்டுப் பிடியுங்கள் ஜே.கே"

"பாபு உங்களுக்கு நன்றாகத் தெரியும், அவன் படிப்பு முடித்து ஓராண்டு தாண்டி விட்டது. நானும் இவ்வளவு நாளும் விட்டுப் பிடிப்போம் என்றுதான் நினைத்தேன். இனி பிந்த முடியுமா?"

" உங்கள் பையன் தோளுக்குமேல் வளர்ந்த பிறகு தோழன் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்."

"அதற்காக சும்மா சோம்பேறியாக ஊரைச் சுற்றிக்கொண்டு திரிந்தால்.... ஆம் பாபு ஒன்று செய்யுங்கள். என் தங்கை பத்மினி வீட்டிற்கு நேரடியாகப் போய் என் பையன் அரசு இருக்கிறானா என்று பார்த்துச் சொல்கிறீர்களா?"

"சரி." என்றது எதிர்முனை. தொடர்பை துண்டித்ததும் திரும்பவும் செல் போன் பாடல் ஒலிக்க "ஹலோ" என்றார். "அப்பா நான் அரசு பேசுகிறேன்." என்றது எதிர்முனை.

"அரசு எங்கிருக்கிறாய்?" கொஞ்சம் கோபமும், எரிச்சலும், ஆதங்கமும், பயமும் கலந்து குரலை அடக்கிக் கொண்டார்.

"நான் அத்தை வீட்டிலேயிருந்து பேசுகிறேன் அப்பா." என்றான் தமிழரசு.

"ஏண்டா மூன்று நாட்களாக போனும் பண்ணாமல், செல்போனையும் அணைத்துப் போட்டு விட்டு.. வீட்டுக்கும் வராமல் அம்மா எவ்வளவு வருத்தப்பட்டுக் கொண்டு".... கோபமாக சப்தம் தெறிக்க....

"அப்பா..... சப்தம் போடுவதில் நீங்கள் சூரர்தான். பேசுங்கள்." என்றான் தமிழரசு.

கவிஞர் இரஜகை நிலவன்

சுதாரித்துக் கொண்டு "ஏண்டா இப்படி அம்மாவைக் கஷ்டப் படுத்துகிறாய்." என்றார் சன்னமாக.

"அப்படீன்னா என் அப்பா என்கிற ஜே.கே. என்னும் ஜெயக்குமார் அவர்களுக்கு அவர் மகன் திரு தமிழரசு காணாமற் போனதில் கவலை இல்லை அப்படித்தானே?"

"ஏன் அரசு…. ஏன் இப்படு பேசுகிறாய். அந்த செங்குப்தா உனக்கு இதெல்லாம் சொல்லிக் கொடுத்தானா?"

"அப்பா அவர் உங்கள் மைத்துணர். உங்கள் உங்கள் மைத்துனர் என்ற மதிப்புக் கொடுங்கள்.அவர் உங்கள் தங்கை பத்மினியின் கணவர்."

"புடுங்கி…. அவன் என் தங்கையை வளைத்துப் போட்டுக் கல்யாணம் பண்ணிக் கொண்டு இப்போது என் மானத்தை வாங்கிக் கொண்டிருக்கிறான். அரசு நீ நேரே வீட்டிற்கு கிளம்பி விடுகிறாயா? இல்லையென்றால் நான் வந்து பிக் அப் பண்ணிக் கொள்ளட்டுமா?"
"நான் வரணுமா? வேண்டாமா? என்பது உங்கள் கையில்தான் இருக்கிறது அப்பா.", "என்ன சொல்கிறாய் நீ"

"நான் உங்கள் வியாபார சாம்ராஜ்யத்தை கட்டிக் காக்க வரவில்லை. நான் என் காலில் சுயமாக நின்று சம்பாதிக்க வேண்டுமென்று ஏற்கனவே இரண்டு மூன்று முறை சொல்லி விட்டேன்."

"ஓ! நீ இன்னும் அதிலேயிருந்து வெளியே வர வில்லையா. இத்தனை பெரிய பிஸினஸ் சாம்ராஜ்யம் உருவாக்கினதே உனக்காகத்தானே."

"அய்யோ கேட்டுக் கேட்டுப் புளிச்சுப்போச்சு.", "கஷ்டப்பட்டு சம்பாதித்திருந்தால் அதன் அருமை புளித்திருக்காது மகனே."

"நீங்கள் எனக்கு ஒரு முடிவு சொல்வதாக இருந்தால் மட்டுமே நான் வீட்டிற்கு திரும்புவதாக உத்தேசம்."

"இதெல்லாம் போனில் பேசுகிற பேச்சாடா?", "அப்பா….. பேச வைபது நீங்கள். இதைப்பற்றி எப்போதே பேசி முடிவெடுத்திருக்கலாம்."

"உன்ன அந்த செங்குப்தா தூண்டி விடுகிறானோ என்று எனக்குள்ளே சந்தேகம் வலுத்துக்கொண்டே போகிறது."

"ஏன் வீணாக மாமாவைச் சந்தேகப்படுகிறீர்கள். அவரிடம் இதைப்பற்றி நான் பேசியது கூட கிடையாது."

"சரி, வீட்டிற்கு வா. கலந்தாலோசிக்கலாம்."

"ஆலோசனைக்கூட்டமெல்லாம் நிறைய முடிந்து விட்டது.இன்றைக்கு முடிவிற்கு வந்தாக வேண்டும்."

"சரி..வா..." போனை துண்டித்து யோசனை செய்தவாறே வண்டியை ஓட்ட ஆரம்பித்தார்."

மும்பைக்கு வந்து ஒவ்வொரு பைசாவிற்காக, ஒரு நேர சாப்பாட்டிற்காக பட்ட பாட்டினை ஒருமுறை நினைவுத் திரைக்குக் கொண்டு வந்தார். இத்தனை கஷ்டப்பட்டு எத்தனை தடைகளை உடைத்து... எத்தனை இன்னல்களை கடந்து...ஒரு பெரிய வியாபார சாம்ராஜ்யத்தை உருவாக்கி வைத்துள்ள என்னிடமிருந்து தனித்துப் போக விரும்புகிறான் என் ஒரே மகன் தமிழரசு.

அப்புறம் யாருக்காக?.... எதற்காக ஓடி ஓடி அலைந்து இவ்வளவு சொத்துக்களும் வியாபார விரிவுகளும்.... இந்த விரிவுகளுக்காக உறங்காத இரவுகள் எத்தனை.... எத்தனை முறை மூளையைப் பிழிந்து யோசித்துக் கணக்குப் போட்டு ஆண்டுக் கணக்கில் அடித்தளமிட்டு ஒவ்வொரு கம்பெனியாக ஆரம்பித்து மும்பை மட்டுமின்றி சென்னை, பெங்களூர், கல்கத்தா, ஹைதராபாத், டெல்லி என்று ஏறக்குறைய எழுபது நகரங்களில் விரித்து ஒவ்வொரு இடங்களிலும் அந்தந்த வியாபாரத்தை விருத்தியடையச் செய்ய இரவென்றும் பார்க்காமல் விழித்துக் கொண்டே பயணம் செய்து, எதற்காக.... எனக்கும் என் மனைவிக்கும் மூன்று வேளை உணவிற்காக மட்டுமென்றால் எப்போதே இந்த ஓட்டத்தை நிறுத்தியிருக்கலாம்.

நாளைக்கே என் மகனுக்காக ஒரு அலுவலகம் அமெரிக்காவிலும் இருக்க வேண்டும் என்பதற்காக இன்று அவசர அவசரமாக மேலதிகாரிகள் கூட்டத்தை முடித்துக் கொண்டு நாளைய பயணத்திற்காக இப்படி ஓட வேண்டுமா?

ஜப்பானிலும் கால் வைக்க வேண்டும். என் மகன் தமிழரசு உலகளவில் வியாபாரம் நடத்த வேண்டுமென்று ஒரு பெரிய அளவு பணம் செலவழித்து பெரிய மாநாடு ஒன்றை நடத்தி புதிய வகையான மின் பொருட்கள் செய்ய ஒரு பெரிய தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கும் வேளையில் இப்படி ஒற்றைக்காலில் நின்று கொண்டிருக்கிறானே.


கவிஞர் இரஜகை நிலவன்

# முகவரி தேடும் காற்று

சொந்தக் காலில் நிற்க விரும்பும் அரசு

அத்தியாயம் 2

(நவீனம்)

இன்று எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லலாம். நான் ஒரு நாளைக்கு சாப்பாட்டிற்கு மூன்று வேளையும் வெறுமெனே தண்ணீர் மட்டும் சாப்பிட்டு விட்டு மழைக்கு ஒதுங்க முடியாத இடங்களில் கூட தூறலில் சாரலை வெறுத்துக் கொண்டே தூங்கிய கதைகளை… திருமணமாகி மருத்துவர் செலவிற்கு பணமில்லாமல் டாக்டரின் காலைப் பிடித்து விட்டு… அவருடைய காலில் விழுந்து மன்றாடியதைச் சொல்லலாம். எதைச் சொன்னாலும் கேட்க மறுக்கின்ற பிள்ளையை என்ன செய்வது? அடித்து திருத்துகிற வயசில்லை. சொன்னால் கேட்கிற இரகமில்லை. இவனை என்ன சொல்ல. என்ன செய்ய…'

வீட்டிற்கு வந்து காரை நிறுத்திவிட்டு வாசலுக்கு வந்ததும் பொங்கும் மகிழ்ச்சியுடன் அவருடைய மனைவி ராணி வேகமாக வந்து "அரசு வந்தாச்சு, மூணு நாலைக்குளே இளைத்துப் போய்விட்டான்." என்றாள்.

"என்ன செய்கிறான்.", "டிபன் சாப்பிடச் சொன்னேன். அப்பா வரட்டும் என்று சொல்லிக் கொண்டு துணி கூட மாற்றாமல் இருக்கிறான்."

"சரி, வா. எனக்கும் அவனுக்கும் காபி கொண்டு வா." என்று சொல்லி விட்டு உள்ளே வந்த ஜே.கே. "வா அரசு எப்போது வந்தாய்" என்று சொல்லி விட்டு "வசந்தா காபி கொண்டு வா" என்றார் வேலைக்கார பெண்ணிடம்.

"காபி எல்லாம் அப்புறம் சாபிடலாம். நான் கேட்டதற்கு முடிவு சொல்லுங்கள்."

"அரசு கொஞ்சம் யோசித்துப் பார். இந்த வியாபார சாம்ராஜ்யம் உருவாக்க எத்தனைக் கனவுகள் எத்தனை உழைப்புகள்… யாருக்காக உன்னிடம் ஒப்படைப் பதற்காக நீ கஷ்டப்படாமல் இருப்பதற்காக."

"அய்யோ அப்பா திரும்பவும் ஆரம்பித்து விட்டீர்களா? இனி அந்தப் பழைய ஒரு வேளை சாப்பாடு கிடைக்காத கதை. எனக்கு சலித்து விட்டது. வருகிறேன்." என்று கிளம்பினான்.



தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# கொல்லிமலை மனதை கொள்ளை கொல்லும் மாமலை

கட்டுரை

**முன்னுரை:**




சுற்றுலா என்பது உங்களை நீங்கள் உணர்வதற்கான இடம்.அது நண்பர்களுடன் சேர்ந்து செல்லும் போது மகிழ்ச்சிக்கான இடமாக மட்டுமே அது மாறிவிடுகிறது.
"பயணம் செய்வது வேறு சுற்றுலா செல்வது வேறு அறிந்து கொள்ளும் வழி
சுற்றுலா என்பது பொழுதை போக்குவதற்கான வழி"
-எஸ்.ராமகிருஷ்ணன்
நம்மை விட பெரியவர்கள் இந்த ஈரேழு உலகிலும் இல்லை என்று ஆணவத்தின் உச்சிக்கு செல்லும் போது இயற்கை நம்மை பார்த்து அநியாசமாக சிரிக்கும். நம்மை விட பெரியது ஆண்டவன் படைப்பில் இயற்கை மட்டும் தான்.

"எங்கே போவதென்று எப்போதும் தெரிந்ததில்லை. இங்கிருந்து போனால் மட்டும் போதும் என்பதை தவிர வேறு பிரார்த்தனைகள் இல்லை" -மனுஷ்-

என்பது மாதிரி பயணபட்டு விடுங்கள்.பயணம் ஒன்றே நம்மை நாம் அறிவதற்கான வழி. நாமக்கல் பெயரை கேட்டவுடன் நமது கண்களில் விரிவதெல்லாம் நாமக்கல் ஆஞ்சநேயர் தான் அதையும் தாண்டி பல பெருமைகளை தனக்குள்ளே வைத்திருக்கும் மாவட்டம்.

**கொல்லிமலை:**

கொல்லிமலை கொல்லும் மலை என்று பலரால் சொல்லப்பட்டாலும் இயற்கையின் அழகை தனக்கத்தே கொள்ளை அழகுடன் கொண்டிருக்கும் மாமலை கொல்லிமலை. சங்க காலம் தொடங்கி இப்போதும் எப்போதும் பல வரலாறுகளை தாங்கி நிற்கும் மலை. சுமார் 1200 படிக்கட்டுகளில் இயற்கையை இரசித்தவாறே கீழிறங்கி சென்றால் ஆகாய கங்கை நீர் வீழ்ச்சி ஆதியும் அந்தமும் இல்லா ஆண்டவன் போல வானத்துக்கும் பூமிக்குமாக நின்று தனது நடனத்தை ஆடுகிறது ஆகய கங்கை நீர் வீழ்ச்சி.

கீழிறங்கும் போதே மூலிகை வாசம் நமது நாசியை துளைக்கும் அங்காங்கே இளைப்பாற குடில்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. இளைப்பாறி செல்லலாம் குடிநீர் வசதியும் அங்காங்கே செய்யப்பட்டுள்ளது.
சூப் கடையும் வைக்கப்பட்டுள்ளது. இயற்கையின் வாசத்தோடும், நிழலோடும் மலையில் இறங்கி வந்து ஆகய கங்கை நீர் வீழ்ச்சியில் நீராடுவதே பேரனாந்தம்

திரு தினேஷ் கண்ணா, வழுதாவூர்

கட்டுரை

இது என்னடா இது?
அந்தப் பாறை முகடுகளில்
தண்ணீரைத் துவைத்துக்
காயப்போட்டது யார்?

இது
எழுந்து நிற்கும் நதியா?
தண்ணீரின் வீசுவரூபமா?

நக்கீரா!
இதை நீர்வீழ்ச்சி என்பது
பொருட்குற்றம் அல்லவா?

நீருக்கு இது வீழ்ச்சியல்ல
எழுச்சி!
உன் பழமொழி
பொய்யடா தமிழா!
இதோ
இங்கே நெருப்பில்லாமல்
புகைகிறதே!

இங்கென்ன
தண்ணீர் முத்துக் குளிக்கிறதா?
இது என்ன
வானுக்கும் பூமிக்கும்
வைரநெசவா?

அது என்ன
தற்கொலை புரியும் தண்ணீருக்கு
அத்தனை ஆனந்தமா?
கண்டேன்
கண்களுக்குள் மழை!

கேட்டேன்
காதுக்குள் கச்சேரி
தொட்டேன்
ஜீவனுக்குள் சில்லிப்பு

உண்டேன்
பல்லிடுக்கில் பனிக்கட்டி
முகர்ந்தேன்
இனந்தெரியா ஈரமணம்

ஓகோ!

கண்டு கேட்டு உண்டுயிர்த்து
உற்றறியும் ஐம்புலனும்
அருவியின் கண்ணும் உள!

அருவியே! அருவியே!
அடர்ந்த அருவியே!
உன்னை எழுதும் போது
கூறியது கூறுலும்

எனும் கவிதையின் வரிகளை நினையாமல் இருக்க முடியாது. பூமி இந்த அதிசயத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

விண்ணிலிருந்து மழை மலை மேல் பட்டு இயற்கை வளங்களை தொட்டு மூலிகைகள் மீது பட்டு பாழாப்போன இந்த அற்ப மனிதனின் மேனியில் படும். அவர்களைப் புனிதப்படுத்தி தங்க குடத்துக்குள்ளும் நிரைக்குமே அப்போது என்ன மினரல் வாட்டர் இந்த ஆகாச கங்கை அருவியில் குளித்தும்,குடித்தும் பாருங்கள் இதன் மூலிகை தன்மை உடலில் உள்ள அனைத்து அழுக்குகளையும் வெளியேற்றும். குளிச்சி முடிச்சு படிகளை மெல்ல மெல்ல மேலேறி வந்தீங்கனா பக்கத்தில் ஒரு சிற்றருவி அதில் ஆனந்த குளியல் போடலாம் ஆகாச கங்கை


திரு தினேஷ் கண்ணா, வழுதாவூர்

# கட்டுரை

அருவியை இன்னும் கொஞ்சம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து சுற்றுலாபயணிகளை குளிக்க அனுமதிக்கலாம் கூடவே நெகிழிகளை உள்ளே எடுத்து செல்ல தடைவிதிப்பது போல மிதியடிகளை போட்டு செல்ல தடை விதிக்கலாம். கூச்சலிடுவதை பயணிகள் தவிர்க்கலாம். ஆபத்தான முறையில் இந்த ஆகாச கங்கை அருவி உள்ளது அதை சரிசெய்து பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் வன,காவல் அதிகாரிகளை நியமிக்கலாம். நீண்டு நெடிதுயர்ந்து கொட்டும் மாமழை போல் கொட்டும் அருவியை இரசிப்பதும் அனுபவிப்பதுமே சுற்றுலா பயணிகளின் நோக்கமாக இருக்க வேண்டும்.

ஆகாச கங்கை அருவி சகல வியாதிகளையும் போக்கும் அருவி.

மேலே ஈசன் அறபளீஸ்வராக காட்சி தருகிறார் தல வரலாற்றை கீழே காண்போம்.



சங்க காலத்தில் கொல்லிமலையானது சதுரகிரி என்றும், தர்மதேவதை கொல்லி மலையாக இருப்பதால் 'அறமலை' என்றும் அழைக்கப்பட்டது. அம்பலவாண கவிராயர் இத்தலத்து இறைவன் மீது அறப்பளீஸ்வரர் சதகம் என்ற நூலை இயற்றியுள்ளார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தமது தேவாரப் பாடல்களில் கொல்லிமலை பற்றி குறிப்பிட்டுள்ளனர். இத்தலத்து சிவபெருமான் சுயம்பு மூர்த்தி. இறைவன் அறப்பளீஸ்வரர், அன்னையின் பெயர் அறம்வளர்நாயகி என்பதாகும். அறை என்றால் மலை, பள்ளி என்றால் தங்கியிருப்பவர் என்று பொருள். மலையின்மீது ஆலயம் அமைந்துள்ளதால் அறைப்பள்ளீஸ்வரர் என்று இறைவன் அழைக்கப்பட்டார். ஆனால் காலப்போக்கில் இப்பெயர் மருவி அரப்பளீஸ்வரர் என்று தற்போது மக்களால் அழைக்கப்படுகிறார்.

தஞ்சை பெருவுடையார் கோயில் கட்டிய ராஜராஜ சோழனின் பெரிய பாட்டியும், சிவஞான கண்டராதித்த சோழ தேவரின் மனைவியுமான செம்பியன் மாதேவி, விஜயநகர அரசர் வேங்கடபதி, சோழ மன்னர்கள் பராகேசரிவர்மன், குலோத்துங்க சோழன், பராந்தக சோழன். கோவிலின் அருகில் ஆகாய கங்கை அருவி உள்ளது. கோரக்க சித்தர், காலாங்கிநாத சித்தர் ஆகியோர் தங்கியிருந்த குகைகள் அருவிக்கு சற்று தூரம் தள்ளி அமைந்துள்ளன. ஓரி மன்னர் அரசாண்ட பகுதியாதலால் கோவிலிலிருந்து 11 கி.மீ தொலைவில் உள்ள செம்மேடு பகுதியில் அம்மன்னனுக்கு சிலை உள்ளது. ஆடிப்பெருக்கன்று விழா எடுக்கப்படும். மலைவாழ் மக்கள் நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

திரு தினேஷ் கிண்ணா, வழுதூவூர்

கொல்லிமலை நாட்டு அரசன் பொறையன். - இளங்கீரனார் — நற்றிணை 346
வேற்படை கொண்ட பசும்பூண் பொறையன் இதன் அரசன்- ஔவையார் — அகம் 303
பொறையன் இதன் அரசன் — நற்றிணை 185

என்று சங்க இலக்கியங்களும், சைவத்திருமுறைகளும் இந்த கொல்லிமலையை கொண்டாடுகிறது. சிறுதெய்வமாக மாசிபெரியண்ணசாமியும்,எட்டுகை அம்மனின் கோவிலும் இந்த கொல்லிமலையில் காணவேண்டிய பகுதி.

**நிறைவுரை:**

ஓரி ஆண்ட பகுதியில் உற்சாகத்துக்கு குறைவில்லாமல், உணவுக்கும் பஞ்சமில்லாமல், இயற்கையை சீரழிக்காமல், பாதுகாப்புடன் சென்று வருவோம்.



திரு தினேஷ் கண்ணா, வழுதூரவூர்

# தேவதைகள் தூங்குவதில்லை

## நூல் அனுபவம்

கதைகளின் வழியே தான் மொழி உயர வளர்ந்து சிறப்பு பெற்றிருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. கதைகளின் வழியே தான் எல்லா இலக்கியங்களும் வளர்ந்திருக்க வேண்டும் என்பது என் கருத்து. ஒரு கதையை கருவாகக் கொண்டுதான் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன.




ஒரு சிறந்த கதை எந்த ஒரு காலகட்டத்தையும், பண்பாட்டையும், கலாசாரத்தையும் அதன் கொண்டாட்டங்களையும், வாழ்ந்த சுவடுகளையும், வாழ்ந்து முடித்த எச்சங்களையும், வாழ்வியல் தத்துவங்களையும், சிறப்பாக வாழ்ந்த கதாபாத்திரங்களையும் ஒரு காலத்தின்கண்ணாடியாக, மிகச்சிறந்த சாட்சியாக நின்று, காலத்திற்கும் அந்த எண்ணங்களை தூக்கிப்பிடித்து அவர்களுக்கான அங்கீகாரத்தை பறை சாற்றிக் கொண்டே இருக்கும். இந்த வகையில் நீங்கள் எத்தனை கதைகளை வேண்டுமானாலும் ஆதாரமாகச் சொல்லலாம். இன்று குழந்தைக்கு சொல்லும் "பாட்டி வடைசுட்ட கதை"யில் இருந்து "மகாபாரதம்"வரைஇதிகாசங்களாக, புராணங்களாக, பேசப்படும் அத்தனையும் கதைகளின் வழியே பிறந்ததுதான்.

ஒரு ஆகச் சிறந்த கதை என்பது வாசிப்பவர்களை அதனோடு பயணிக்க வைக்கவேண்டும். அந்த எழுத்துக்கள் வாசகனை கதையோடு இழுத்துச் செல்ல வேண்டும். நம் கவனம் சிதறாத வண்ணம் அந்தக் கதையின் பயணத்தில் நம்மை முழுமையாக ஒப்படைக்கச் செய்ய வேண்டும். ஒரு தீ, எப்படி பற்றிய உடன் பரவுகிறதோ, அதுபோல படிக்கும் நம்மை மொத்தமாக ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும். காட்சிகளை மிக சிறப்பாக எழுத்தாக்கி இருக்கிறார் கதாசிரியர்.

நிகழ்வுகளை நம் மனக் கண் முன்னே கொண்டு வரும் அளவிற்கு அவரின் எழுத்துக்கள் மிக நேர்த்தியாக சிறப்பாக அமைந்துள்ளது. அடிப்படையில் இவர் ஒரு கவிஞர் என்பதாலோ என்னவோ வர்ணனைகள் மாவிலைத் தோரணங்களாய் இக்கதைக்கு அழகூட்டுகின்றன. இது போன்று ஒரு அருமையான சிறுகதை தொகுப்பை கொடுத்த கதாசிரியரும், ஆகச் சிறந்த எழுத்தாளராக கதாசிரியராக வலம் வரவிருக்கும் எனது அன்பிற்கினிய நண்பருமான இரஜகை நிலவன்அவர்களுக்கு எனது நெஞ்சினிக்கும் வாழ்த்துக்களைப் பதியமிடுகிறேன். இன்னும் இது போன்ற பல கதைகளை இரஜகை நிலவன்அவர்கள் எழுத வேண்டும், நிறைய எழுத வேண்டும். வாசகர்களும் இதுபோன்ற இவர் கதைகளைப் படித்து மிகுந்த ஆதரவு தருவார்கள் என்று நம்புகின்றேன். அன்பும்... மகிழ்வும்... என்றும்

**திரு கா. பாபுசசிதரன், எழுத்தாளர்**

நாளை நமதே

# பிரச்சினைகள் நம்மை செதுக்கவருவதாக நினைத்து எதிர் கொள்ளுங்கள் சிதைந்து போகாதீர்கள்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com